**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I,**

**கொடைக்கானல்.**

**DVC. No. 09/2021**

**வழக்கு சாட்சி RW.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **விஜய்** | தொழில் | : உரம் மருந்துக்கடையில் வேலை செய்கிறேன். |
| தகப்பனார் பெயர் | : முத்துச்சாமி | கணவர் பெயர் | : ----- |
| கிராமம் | : சங்ககிரி | இனம் | : ஆண் |
| தாலுகா | : சேலம் | வயது | : 41/2026 |
| மாவட்டம் | : சேலம் | நாள் | : 02.02.2026 |

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

எனது சொந்த ஊர் சேலம் மாவட்டம் , சங்ககிரி என்றால் சரிதான் . இந்த வழக்கின் எதிர்மனுதாரர்களான பிரபு எனது தம்பி என்றால் சரிதான் . கீர்த்தனா எனது தம்பியின் மனைவி என்றால் சரிதான் . முத்துச்சாமி எனது அப்பா என்றால் சரிதான் . ராஜம்மாள் எனது அம்மா என்றால் சரிதான் . கந்தசாமி எனது சித்தப்பா ஆவார். திருமணம் ஆனது முதல் பிரபு, கீர்த்தனா, முத்துச்சாமி, ராஜம்மாள் ஆகியோர்களுடன் நானும் , மனுதாரரும் கூட்டுக்குடும்பமாக வாழ்ந்தோம் என்றால் சரியல்ல , எனது அம்மா ராஜம்மாள் மற்றும் எனது அப்பா முத்துச்சாமி மட்டும்தான் என்னுடனும் , மனுதாரருடனும் வசித்து வந்தார்கள் . தற்போது நான் இடுக்கி மாவட்டம் , அணக்கராவில் வசித்து வேலை செய்து வருகிறேன் . எனது அம்மா என்னுடன்தான் அணக்கராவில் (கேரளா) தான் உள்ளார் . மற்ற எதிர்மனுதாரர்கள் என்னுடன் தொடர்பில்தான் உள்ளார்கள் என்றால் சரிதான்.

மேற்சொன்ன எதிர்மனுதாரர்கள் மீதும் இந்த வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது என்ற விபரம் அவர்களுக்கு தெரியுமா என்றால் தெரியும். வேண்டுமென்றே மேற்சொன்ன எதிர்மனுதாரர்கள் இந்த வழக்கில் தோன்றாமல் தோன்றா தரப்பினர் ஆகிவிட்டார்கள் என்றால் சரியல்ல. நானும், மனுதாரரும் திருமணம் ஆன புதிதில் ஆரம்பத்தில் சங்ககிரியில்தான் வசித்து வந்தோம் . சங்ககிரியில் வசித்தபோது என்

அம்மா, அப்பா உடன் வசித்து வந்தார்கள் என்றால் சரிதான் . என் அம்மா, அப்பா வயதானவர்கள் என்பதால் மனுதாரரை வேலை செய்யச்சொல்லி வேலை வாங்கி வந்தேன் என்றால் சரியல்ல . வீட்டு வேலையை என் அம்மாதான் கவனித்து வந்தார் . என் குழந்தை வத்தலக்குண்டு தனியார் மருத்துவமனையில் பிறந்தது . குழந்தை பிறந்த அன்று நான் என் மனைவியுடன்தான் மருத்துவமனையில் இருந்தேன் . பேறு காலம் முடிந்தவுடன் மனுதாரரை அவரது அம்மா , அப்பா வீட்டில் விட்டு சென்றேன் என்றால் சரியல்ல , மனுதாரரும் , அவரது அக்காவுக்கும் சமகாலத்தில் குழந்தை பிறந்ததால் இருவரும் வத்தலக்குண்டில் வீடு பிடித்து தங்கியிருந்தார்கள்.

மனுதாரரையும், என் குழந்தையையும் 13 மாதங்கள் கழித்து சங்ககிரிக்கு அழைத்துச்சென்றேன். இடைப்பட்ட 13 மாத காலத்தில் நான் மனுதாரரைப் பார்த்தேனா என்றால் டிசம்பர் முதல் ஜீலை இடைப்பட்ட காலத்தில் இரண்டு, மூன்று முறை மனுதாரரையும், எனது குழந்தையையும் பார்த்துச் சென்றேன் . ஜீலை மாதத்திற்கு நான் மனுதாரரையும் , குழந்தையையும் 6 மாத காலம் பார்க்கவில்லை என்றால் சரிதான் , நான் வேலை நிமித்தமாக வெளிநாடு சென்றுவிட்டேன் . 2019 பிப்ரவரி மாதம் மனுதாரரையும், குழந்தையையும் சங்ககிரிக்கு அழைத்துச்சென்றேன் . மனுதாரரை நான் வெளிநாடு செல்லும் முன்பு சங்ககிரிக்கு அழைத்துச்சென்றிருந்தால் பிரச்சனை ஏற்படும் என்ற காரணத்தால் சங்ககிரிக்கு அழைத்துச்செல்லவில்லை என்றால் சரியல்ல , குழந்தை நடந்தால் மட்டும்தான் நான் சங்ககிரிக்கு வருவேன் என்று மனுதாரர் தெரிவித்துவிட்டார். நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் மனுதாரர் கர்ப்பமுற்றது முதல் நானும் , எனது பெற்றோரும் மனுதாரரை கவனிக்க மறுத்துவிட்டோம் என்றால் சரியல்ல . எனக்கு பெண் குழந்தை பிறந்த காரணத்தால் குழந்தை பிறந்த காலகட்டத்திலேயே மனுதாரரையும், குழந்தையையும் சங்ககிரிக்கு அழைத்துச்செல்ல மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல . பிறகு மனுதாரரின் உறவினர்களின் அறிவுறுத்தலின்பேரில் மனுதாரரை சங்ககிரிக்கு அழைத்துச்சென்றேன் என்றால் சரியல்ல.

மனுதாரரை சங்ககிரிக்கு அழைத்துச்சென்று பிறகு 1 வார காலத்திலேயே நான் வெளி நாடு புறப்பட்டு சென்றுவிட்டேன் என்றால் சரிதான். 3 மாதங்கள் கழித்து நான் வெளிநாட்டிலிருந்து திரும்பி வந்தேன் . நான் வெளிநாடு சென்றிருந்த காலகட்டத்தில் என் தாய் , தந்தையர் நகைகள் கேட்டு மனுதாரரை கொடுமை செய்து சங்ககிரி வீட்டில் இருந்து

வெளியே அனுப்பி விட்டார்கள் என்றால் சரியல்ல . நான் வெளிநாட்டில் இருந்த காரணத்தால் என் தாய், தந்தையர் மனுதாரரை கொடுமை செய்த விபரம் எனக்கு தெரியாது என்றால் எனது பெற்றோர் மனுதாரரை கொடுமை செய்யவில்லை. நான் வெளிநாடு சென்று திரும்பியபோது சங்ககிரியில் எனது மனைவி என் வீட்டில் இல்லை என்றால் சரியல்ல . முதல் முறை நான் வெளிநாடு சென்று 3 மாதங்கள் கழித்து ஊர் திரும்பியபோது மனுதாரர் சங்ககிரியில் என் வீட்டில்தான் இருந்தார் , அதன்பிறகு வெளிநாடு 2 வது முறை 3 மாத பணிகாலத்திற்கு பின்பு ஊர் திரும்பியபோதுதான் சங்ககிரியில் மனுதாரர் இல்லை.

**(மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது)**

Taken down by me in open court and read over to the witness and acknowledged by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.02.02 18:00:50 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.